முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1113

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.10.2022, ஞாயிற்றுக்கிழமை

1. அறமாக வாழுகின்ற அரங்கா
அன்னதான சேவையாற்றும் தேசிகா
வரம் கூட்டி உந்தனுக்கு ஆறுமுகன் யான்
வழங்குவேன் தொடர்ந்து ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் சுபகிருது நங்கை திங்கள்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 29 ம் நாள் 16.10.2022, ஞாயிற்றுக்கிழமை)
அருளுவேன் அரங்கனுக்கு ஆற்றல்கூட
கூடவே கலியுகத்தில் அரங்கனே
குறையில்லா மாற்றம் செய்யும் மாதவசி
3. ஈடேற்றம் அரங்கன் கொள்கை எல்லாத்துக்கும்
ஏற்று உலகோர் பக்குவம் படும் வண்ணம்
வண்ணமுடன் அற்புதம் நிகழவே
வையகம் உலகமாற்றமாக காணும்
4. எண்ணமெல்லாம் அரங்கன் நாமஜெபம்
எல்லோர்க்கும் சித்தியாக மாறவே
மாறவே இந்த அற்புதம் மண்ணுலகம் கண்டு
மாதவசி அரங்கன் அவதார நோக்கமாக பூர்த்தியாகும்
5. ஆகவே அரங்கனுக்குள் யானிருந்து ஆற்றல்கூட்டி உலகோரை அழைத்து
அழியாமைக்குண்டான வரம் தந்து வருகின்றேன்
வகைபட அரங்கனை உணர்ந்து
வழிமொழிந்து உலகமெங்கும் அரங்கன் தர்மம் பரப்பி
6. பெருமைபட அரங்கன் சீடர்களென
பூவுலகில் வாழும் மக்களெல்லாம்
ஆறுமுகன் என்னருளால் அழியாமை பெற்று
அகிலத்தில் ஞானிகளாக நேரும்
7. ஆகவே அரங்கன் தொடர்பு கூட்டி
அகிலத்தோர் அணுகஅணுக
ஞானலோகம் சடுதி மாற்றங்கண்டு
ஞான ஆட்சிக்காலம் ஞானசித்தர்கள் காலமாகக் கனியும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–